විවරණිකා-2025/26-01

සංදේශය
SANDESHAYA

ලංකා බැංකු විශ්‍රාමිකයන්ගේ සංගමයේ පුවත්
NEWS OF BOC PENSIONERS' ASSOCIATION

# மடல்

*Translation*

# இலங்கை வங்கி ஓய்வூதியர்கள் சங்கத்தின் செய்திகள்

**45வது ஆண்டு விழா பொதுச் சபை வெற்றிகரமாக நடைபெற்றது !**

இலங்கை வங்கி ஓய்வூதியர்கள் சங்கத்தின் 45வது ஆண்டு விழா பொதுச் சபை 2025 ஏப்ரல் 26ஆம் திகதி கொழும்பு கோட்டையில் உள்ள கிராண்ட் ஓரியண்டல் ஹோட்டல் வளாகத்தில் விமரிசையாக நடைபெற்றது.

சங்க யாப்பின்படி நாடு முழுவதும் உள்ள ஒன்பதாயிரத்தைத் தாண்டிய பொது அங்கத்துவத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 459 பேர் கொண்ட பிரதிநிதிகள் பொதுச் சபையில் பங்கேற்க அழைப்பு பெற்றிருக்க, அதில் 360 பிரதிநிதிகள் பங்கேற்றனர். நான்கு பிரதிநிதிகள் பங்கேற்காதிருக்க அனுமதி கேட்டிருந்தனர். பிரதிநிதிகளின் வருகையுடன் காலை 9.30 மணிக்கு சங்கத்தின் தலைவர் திரு. நிஹால் கமகேவின் தலைமையில் சபையின் நடவடிக்கைகள் தொடங்கின.

பாரம்பரிய விளக்கேற்றல் மற்றும் தேசிய கீதம், வங்கி கீதம், இலங்கை வங்கி ஓய்வூதியர்களின் கீதத்தோடு வருடாந்த பொதுக்கூட்ட நடவடிக்கைகள் தொடங்கி பிற்பகல் 2.00 வரை நடந்தது என்பதனை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்.

வருடாந்த பொதுக்கூட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட சங்க உறுப்பினர்கள் யாப்பிற்கமைவாக 2025/26 ஆண்டிற்கான மேலாண்மைக் குழுவிற்கு(Committee of Management ) தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| பதவி | பெயர் | தொலைபேசி எண் |
|---|---|---|
| தலைவர் | திரு.கே.ஜினதாச கமகே ( P. 038037) | 077-7554786/2857229<br>kgamagej@gmail.com |
| முன்னாள் உடனடித் தலைவர் (பதவியின் காரணமாக) | திரு.எச் நிஹால் கமகே (P. 124935) | 0777-864237<br>nihal.gamage@gmail.com |
| பொதுச் செயலாளர் | திரு.வே.ராஜேந்திரன்(P. 027808) | 077-3114478<br>jenram999@gmail.com |
| பொருளாளர் | திரு.எச்·எல்·எஸ்·சில்வா (லலித சுனில்) (P.040131) | 071-8070087<br>lalithsilva52@yahoo.com |
| உதவித் தலைவர்கள் | திரு. எச்.என்.கே.எல். ஹேமசிறி (லலித்) (P. 029216) | 077-3308968<br>hemasiri@yahoo.com |
| | திரு. ஜி.ஜி.டி.காமினி. டி சில்வா(P.042581) | 081-2389046/077-2904611<br>gaminidslv36@gmail.com |
| | திரு. என்.எம்.ரஞ்சித் ஆர்.என்.திலகரத்ன(P.125038) | 076-2904999<br>ranjiththilakarathne1954@gmail.com |
| உதவித் செயலாளர் | திரு.எம்.எஸ்.ஏ (லால்) ரொட்ரிகோ (P.021543) | 071-4721716/011-2781557<br>lal.rodrigo@gmail.com |

| | | |
|---|---|---|
| உதவித் செயலாளர் | திரு. எஸ்.எஸ்.பெரேரா (P.096001) | 071-4434670<br>sarathsrilalperera@gmail.com |
| உதவித் பொருளாளர் | திரு. ஏ.ஜி. தக்சல(P.038948) | 0773-577383<br>ag.thaksala@gmail.com |
| செயற்குழு | திரு. பி. வீரசிங்க (P.037578) | 071-8043047/2292014<br>donpweerasinghe@gmail.com |
| | திரு. இ.ஜி.வி.எஸ். டி சில்வா(P.061755) | 077-3717062<br>shiranthade54@gmail.com |
| | திரு. ஏ.டி.கே. குருகே(P.061844) | 077-9515050/2727930 |
| | திரு.ஏ.சந்திரபால (P.069559) | 071-4201307/0342262713<br>athu.chandrapala@gmail.com |
| | திரு.கிவ். பத்திரனகே(P.075665) | 077-5592063/2842776<br>pathiranageq@gmail.com |
| | திரு. எச்.கே.டி. ஹேமந்தா (P.094211) | 077-1696808<br>amarasekerahemantha@gmail.com |
| | திரு. பந்துல அபேசேகர (மாத்தளை) (P.026713) | 077-0301078 |
| | திரு.எச்.எம்.முதியான்சே (புத்தளம்) (P.036962) | 077-3823962 |
| | திரு. டி.எம்.திலகரத்ன (குருநாகல்) (P.038744) | 076-1589459/0372225024<br>tmtilakarathne@gmail.com |
| | திரு. பி.வி. லீலாரத்ன (காலி) (P.059156) | 077-7044427 |
| | திரு.பி.டி.எஸ். லியனகே (கேகாலை) (P.097201) | 071-8241175<br>liyanage330@gmail.com |
| | திரு.ஏ.எஸ்.ஏ.விக்கிரமசிங்க (அனுராதபுரம்) (P.128599) | 071-8106450<br>sarath1960w@gmail.com |
| නිරීක්ෂකයින්<br>அவதானிகள்<br>Observers | திரு. டி.என்.ஜே. திசாநாயக்க (மாத்தறை) (P. 027816) | 071-8170011<br>dnjdissanayake@gmail.com |
| | திரு. குணபால ஜாகொட (பதுளை) (P.062963) | 071-8606333 |
| | திரு.ஆர். ரவீந்திரன் (வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள்) (P.119419) | 077-6006511<br>ravindran57@gmail.com |
| பதவியின் காரணமாக-<br>மரணாதர நிதியம் | திரு.எம்.எஃப்.எஸ்.டபிள்யூ.ஸ்டெம்போ (தலைவர்)<br>(P.036247) | 077-7226751<br>sarthstembo12@gmail.com |
| | திரு.எச்.எம். அபேசேகர (செயலாளர்) (P.078388) | 071-2761720<br>rekhaabey@gmail.com |
| | திருமதி. கே.எம்.கே.எம். பெர்னாண்டோ (பொருளாளர்)<br>(P.057730) | 077-4808686<br>kalyanifernando8@gmail.com |

2025/26 ஆண்டிற்கான சங்கத்தின் உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு திரு. பி.எம். பிரேமரத்னவும் வெளிவாரிக் கணக்காய்வாளராக வி. அசோசியேட் பட்டய கணக்காய்வாளர்கள் நிறுவனமும்(We Associates Charted Accountants) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

முகாமைத்துவக் கூட்டம்

2025/26 ஆண்டிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவின் முதல் கூட்டம் 2025 மே மாதம் 28ஆம் தேதி சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் கீழே குறிப்பிடப்பட்ட துணைக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் மற்றும் புதிய ஆண்டிற்கான சங்கத்தின் செயல்திட்டம் அந்த துணைக்

| | | |
|---|---|---|
| **1.Planning and Negotiations**<br>**திட்டமிடல் மற்றும் பேச்சுவார்த்தைகள்** | Collection of Data to compile proposals to increase benefits under Superannuation Scheme including medical, pension and resolving anomalies. Follow up action on Resolutions adopted at AGM. creating consensus among COM, and membership on position to be taken at Superannuation fund management Meetings | M/s. M.F.S.W. Stembo – **Convenor**<br>G.G.D.G.S.de Silva – H.G. Nihal<br>Lalith Hemasiri - P.D.S. Liyanage –<br>H.M. Mudiyanse,- Q. Pathiranage<br>M.A.S. Rodrigo - |
| **2.Constitution Amendments**<br>**சங்க யாப்பு திருத்தம்** | Finalizing the proposed amendments and placing before the consultative committee/ and the proposed special AGM. | M/s M.A.S. Rodrigo -**Convenor**<br>D.N.J. Dissanayake -Lalith Hemasiri -<br>M.F.S.W. Stembo |
| **3. S.R.F.- Operations**<br>**சிறப்பு நிவாரண நிதி** | Check and approve SRF claims expeditiously. Recommend improvements to sub -Committee on Welfare, and COM. | M/s S. S.Perera -**Convenor**<br>A. Chandrapala -- Sriyantha de Silva<br>A.D.K. Guruge - H.K.D.Hemantha<br>N.M.R.N. Thilakarathne |
| **4. Bulletin/News Letter**<br>**செய்திக்குறிப்பு/செய்திமடல்** | Prepare, publish and distribute Bulletins to members on a regular basis. | M/s P. Weerasinghe – **Convenor**<br>Bandula Abeysekera-Lalith Hemasiri<br>M.A.S. Rodrigo -N.M.R.N. Thilakarathne |
| **5.Digital Media**<br>**டிஜிட்டல் மீடியா** | Create awareness amongst members of our WEB.<br>Update and publish news expeditiously to create uses interest on browsing the Web-Site, improve WhatsApp communication among members | M/s H.L.S. Silva Silva – **Convenor**<br>N.K.Dahanayake- Invitee<br>Jagath Kurundukumara- Invitee<br>B.M. Premarathne-Invitee |
| **6. Finance/Investments and Audit**<br>**நிதி/முதலீடுகள்** | Manage association's funds for optimum yield Streamline preparation of accounts. Monitor district accounts leasing with district committees.<br>Optimum yield.<br>Streamline accounting.<br>Monitor District Accounts | M/s. M.F.S.W. Stembo – **Convenor**<br>N.K. Dahanayake - Invitee<br>M.A.S. Rodrigo, H.L.S. Silva –<br>A.G. Thaksala |
| **7.Welfare**<br>**நலன்புரி** | Find ways and means of assisting membership by developing new schemes.<br>Negotiate with Bank to extend welfare facilities enjoyed by the staff to Pensioners.<br>Organizing Medical Camps.,Negotiating with providers of medical services for discounts.<br>Plan and conduct suitable programs for development of members spiritual life. | M/s Q. Pathiranage – **Convenor**<br>G.G.D.G.de Silva – H.G.Nihal -<br>A.K.D. Guruge H.K.D.Hemantha<br>P.D.S. Liyanage, P.V. Leelarathne<br>A.G. Thaksala<br>M. Sukumaran – Invitee |
| **8. Office Management**<br>**அலுவலக மேலாண்மை** | Disposal of unserviceable equipment/machines<br><br>Destruction of old documents. Streamline staff functions , salary revision, service contract. | M/s S.S. Perera – **Convenor**<br>P. Weerasinghe<br>Q.Pathiranage<br>A.G.Thaksala |
| **9. Death Donation Fund Revision-**<br>**இறப்பு நன்கொடை நிதி திருத்தம்-** | Prepare proposals on revision on Donations to be placed before the CC scheduled to be held in Nov/Dec 2025 based on the Actuarial Report/ Personal Data, and inflation | M/s. H.G. Nihal- **Convenor**<br>M.F.S.W. Stembo – S.S.Perera<br>H.L.S. Silva |

குழுக்களின் முன்மொழிவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுவதற்கு முடிவு செயயப்பட்டுள்ளது.

Note:

President, General Secretary and the treasurer shall be ex- officio members of all sub- committees of the association.

**Medical Appeal Board** Represent Pensioners Medical Appeals with BOC General Secretary and M/s. Q.Pathiranage/S. Srilal Perera/A.G. Thaksala

*மாவட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகள் - District Co-ordinators**

சங்கத்தின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பது மற்றும் அந்த நடவடிக்கைகளின் போது மாவட்ட அமைப்புகள் மற்றும் பிரதான சங்கத்திற்கு இடையே நல்ல உறவைப் பராமரிக்கும் நோக்கத்துடன் கீழ்க்காணும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**1.Central Province -** Kandy Mr G. Bogaswatte - TP 0718254506
- Matale-Nuwara-Eliya Mr Bandula Abeysekera - TP 0770301078

**2. Northern and Eastern Province** Mr R. Ravindran - TP 0776006511

**3. North Western Province –** Kurunegala Mr T.M. Thilakarathne - TP 0761589459
- Puttalam Mr H.M. Mudiyanse - TP 0773823962

4. **North Central Province -** Anuradhapura – Polonnaruwa Mr A.S.A. Wickremasinghe - TP 0718106450

**5.Southern Province-** Gall, Matara, Hambanthota- Mr P. V. Leelarathne - TP 0777044427

**6. Sabaragamuwa -** Ratnapura-Kegalle Mr P.D.S. Liyanage - TP 0718241175

**7. Uva -** Badulla- Moneragala Mr Gunapala Jagoda - TP 0718606333

**8.Western Province-** Colombo Mr H.M. Abeysekera - TP 0712761720
**-** Gampaha Mr H.K.D. Hemantha - TP 0771696808
- Kalutara Mr A. Chandrapala - TP 0714201307

**கண்டி மாவட்ட அமைப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை வாதி தானே வாபஸ் பெறுகிறார்!**

இலங்கை வங்கி ஓய்வூதியர்கள் சங்கத்தின் கண்டி மாவட்ட உறுப்பினர் K.L. ஹேமரத்ன அவர்களால் அந்த மாவட்ட சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் 18 பேருக்கும் மேலாண்மைக் குழுவின்(Committee of Management ) இருவருக்கும் எதிராக கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் 2024-06-06 அன்று தாக்கல் செய்யப்பட்ட எண் 37/2024 வழக்கு திறந்த நீதிமன்றத்தில் வாதியால் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

1. 2023-03-17 அன்று நடைபெற்ற இலங்கை வங்கி ஓய்வூதியர்கள் சங்கத்தின் கண்டி மாவட்ட அமைப்பின் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வெற்றும் செல்லுபடுயாகாதெனஅறிவிக்க வேண்டும் என்றும்

2. அந்த கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்க உத்தியோகத்தர்கள் குழு யாப்பின்படி தேர்ந்தெடுக்கப்படாததால் யாப்பின்படி மீண்டும் உத்தியோக குழுவை தேர்ந்தெடுக்கும்படி தீர்ப்பு வழங்க வேண்டும் என்றும்

3' தற்போது நியமிக்கப்பட்டுள்ள சங்க உத்தயோகத்தர்கள் குழுவிற்கு சங்க நடவடிக்கைகளை நடத்துதல், முடிவெடுத்தல், பணம் செலவு செய்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தடுக்க தடை உத்தரவு வழங்க வேண்டும் என்றும்

வாதி தனது மனுவின் மூலம் மதிப்பிற்குரிய நீதிமன்றத்திடம் கோரியிருந்தார். வழக்கு அழைக்கப்பட்ட முதல் இரு சந்தர்ப்பங்களிலும் நீதிமன்றத்தில் ஆஜராகாத வாதி 2025-04-29 அன்று வழக்கு மீண்டும் அழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆஜராகி தனது மனுவை திறந்த நீதிமன்றத்தில் வாபஸ் பெற்றார்.

அரை நூற்றாண்டை நெருங்கிய காலம் முழுவதும் இலங்கை வங்கி ஓய்வூதியர்கள் சங்கத்தின் பதவிகள் மற்றும் பொறுப்புகளை ஏற்று எங்கள் உறுப்பினர்கள் சங்கத்தினதும் பொது அங்கத்துவத்தினதும் முன்னேற்றத்திற்காக தன்னலமற்ற பணியை குறைத்து மதிப்பிடாமல் தங்கள் சக்தியின் அளவுக்கு ஏற்ப பங்களிப்பு செய்து சங்கத்தை மேம்படுத்த இணையுமாறு சகல உறுப்பினர்களிடமும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

## எங்கள் புதிய தலைவர்கள்

- தலைவர் ஜினதாச கமகே அவர்கள்**




1973 ஒக்டோபரில் இலங்கை வங்கியின் சேவையில் சேர்ந்த பினதாச கமகே அவர்கள் தனது தொழில்சார் நடவடிக்கைகளில் ஈடுபட்டு கொண்டிருந்த அதே வேளை ஏற்கனவே தான் ஈடுபட்டுக்கொண்டிருந்த சட்ட படிப்பு நடவடிக்கைகளிலும் தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்தார்.

1980 ஆம் ஆண்டில் சட்ட அதிகாரியாக இலங்கை வங்கியின் சட்டப் பிரிவில் இணைந்த கமகே அவர்கள் 2011 ஆம் ஆண்டில் இலங்கை வங்கியின் பிரதான சட்ட அதிகாரி பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

2012 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற பிறகு கொழும்பு மாவட்டத்தின் ஹோமாகம பிராந்தியத்தின் மதிப்பிற்குரிய தலைவர் பதவியையும் அடுத்து கொழும்பு மாவட்டத்தின் மதிப்பிற்குரிய தலைவர் பதவியையும் வகித்தது போலவே தாய் சங்கத்தின் துணைத் தலைவர் பதவியை பல ஆண்டுகள் வகித்துள்ளார். இலங்கை வங்கியின் பதவி நிலை அதிகாரிகள் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றிய ஜினதாச கமகே அவர்கள் 2024 ஏப்ரல் 26 ஆம் தேதி நடைபெற்ற வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தில் 2025/26 ஆம் ஆண்டின் புதிய தலைவராக எதிர்ப்பின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- **பிரதம செயலாளர் வேலாயுதபிள்ளை ராஜேந்திரன் அவர்கள்**



இலங்கை வங்கியின் சமகாலத்தவர்களிடையே “ராஜா” என்ற பெயரில் நன்கு அறியப்பட்ட திரு. வே. ராஜேந்திரன் அவர்கள் இம்முறை எங்கள் சங்கத்தின் பிரதம செயலாளர் பதவிக்கு பெரும்பான்மை வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
முன்பும் சங்கத்தின் கௌரவ பிரதான செயலாளர் பதவியை வகித்த ராஜேந்திரன் அம்பிட்டிய மற்றும் கண்டியில் உள்ள பாடசாலைகளில் கல்வி பெற்று இலங்கை வங்கியின் கனிஷ்ட எழுது வினை ஞராக சேவையில் சேர்ந்து 2007 ஆம் ஆண்டில் பிரதான முகாமையாளராக ஓய்வு பெற்றது, 38 ஆண்டுகால வங்கிச் சேவைக்குப் பின்னராகும். இலங்கை வங்கியின் ஓய்வூதியத் துறையின் தொடக்கத்திலிருந்தே பணியாற்றிய ராஜா வங்கியின் வெளிநாட்டுத் துறையிலும், யோர்க் வீதி கிளையிலும் மற்றும் கண்டி, மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களின் பல்வேறு கிளைகளிலும் பணியாற்றியுள்ளார்.

1989 ஆம் ஆண்டு வங்கியால் நடைமுறைப்படுத்தப்பட்ட மறுசீரமைப்புத் திட்டத்தின் (Re-Organization Project) முகாமையாளராக பணியாற்றிய திரு. ராஜேந்திரன் அதன் மூலம் நாடு முழுவதும் உள்ள கிளைகள் மற்றும் மாகாண அலுவலகங்களுக்கு தனது பங்களிப்பை வழங்கியுள்ளார்.

ராஜேந்திரன் அவர்கள் பட்டய உலக நிதி சேவை நிறுவனம் என்றும் அறியப்படும் லண்டனின் உலக வங்கியாளர்கள் நிறுவனத்தின் இணைந்த உறுப்பினராக (Fellow Member)உள்ளார் மற்றும் 2003/2006 ஆண்டுகளில் அந்த நிறுவனத்தின் இலங்கை அமைப்பின் பொதுச் செயலாளர் பதவியையும் வகித்தார்.

1972 ஆம் ஆண்டில் 108 நாள் வேலைநிறுத்தத்தில் தீவிரமாக பங்களித்த ராஜா 2000/2007 காலப்பகுதியில் இலங்கை வங்கி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் முன்னணி செயல்பாட்டாளராக முக்கிய பதவிகளை வகித்து உறுப்பினர்களுக்கு மகத்தான சேவையை நிறைவேற்றினார்.

2007 ஓய்வு பெற்ற பிறகு தெஹிவல பிராந்தியக் கிளையினூடாக ஓய்வூதியர்கள் சங்கத்தின் செயல்பாடுகளில் இணைந்த ராஜேந்திரன் அவர்கள் 2018/19 ஆம் ஆண்டு தாய் சங்கத்தின் உப பொருளாளராகவும், 2019/20 ஆம் ஆண்டு துணை செயலாளராகவும், 2020/23 பிரதம செயலாளராகவும் பாராட்டத்தக்க சேவையை நிறைவேற்றியுள்ளார்.

- **பொருளாளர் லலித சுனில் சில்வா அவர்கள்**



1974 ஜூன் 03 ஆம் தேதி இலங்கை வங்கியின் நீர்கொழும்பு கிளையின் பணியாளர் குழுவில் இணைந்து வங்கிச் சேவையைத் தொடங்கிய லலித சுனில் சில்வா அவர்கள் தெடிகம, கங்கொடுவ, கிரிபத்கொட, கட்டுநாயக்கா போன்ற கிளைகளிலும் மேற்கு மாகாண அலுவலகம், சர்வதேசப் பிரிவு மற்றும் கணினிப் பிரிவில் நீண்ட சேவைக்குப் பிறகு 2009 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

எங்கள் கம்பஹா மாவட்ட அமைப்பின் பிரதம செயலாளர் பதவியை வகித்த லலித் இலங்கை வங்கி ஓய்வூதியர்கள் சங்கத்தின் மரண உதவி நிதியின் பிரதம பொருளாளராகவும் சேவையாற்றியுள்ளார். 2025/26 புதிய ஆண்டிற்காக சங்கத்தின் பிரதம பொருளாளர் பதவிக்கு லலித சுனில் சில்வா அவர்கள் எதிர்ப்பின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## <u>தலைவரின் செய்தி.</u>

### தனிமையை வெல்வோம் !

2024 ஆம் ஆண்டில் இலங்கை வங்கி ஓய்வூதியர்கள் சங்கம் தனது நாற்பத்தி ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது.!
அத்தகைய பெருமைமிக்க சங்கத்தின் பதினோராவது தலைவராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டமை தொடர்பாக அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிப்பதற்கு இதை ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொள்கிறேன். இதுவரை எங்கள் சங்கத்தின் செயல்பாடுகளை மிகச் சிறப்பாக நடத்தி வந்த சங்கத்தின் அனைத்து செயல்பாட்டாளர்களுக்கும் எனது மரியாதையுடனான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது எங்கள் சங்கம் ஓய்வூதிய உறுப்பினர்கள் 7050 பேரையும் விதவைகள் 2016 பேரையும் கொண்டுள்ளது.
ஓய்வுக்குப் பிறகு எங்கள் வாழ்க்கையை நடத்திச் செல்ல ஓய்வூதியம் வங்கியிலிருந்து வழங்கப்படுகிறது மற்றும் எங்கள் மருத்துவச் செலவுகள் சில வரம்புகளுக்கு உட்பட்டு திருப்பிப் பெறுவதற்கான வாய்ப்பும் உள்ளது. ஓய்வூதிய வாழ்க்கையில் அதிக மருத்துவச் செலவுகளை ஏற்க வேண்டியிருப்பது இயற்கையானது. ஓய்வூதியர்களுக்கு தற்போது வழங்கப்படும் மருத்துவ உதவி போதுமானதாக இல்லாததால் 2010 ஆம் ஆண்டு வங்கி பணிப்பாளர்கள் சபை அங்கீகரித்த தீர்மானங்களுக்கிணங்க சேவையில் உள்ள பணியாளர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ உதவித்தொகை அளவே ஓய்வூதியர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கடந்த காலம் முழுவதும் சங்கம் செய்து வரும் கோரிக்கை

இதுவரை நிறைவேற்றப்படவில்லை. அந்தக் கோரிக்கையும் உள்ளடங்கலாக உறுப்பினர் உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கத்துடன் சங்கம் தனது முன்னோக்கிய செயல்திட்டங்களைத் திட்டமிடும்.மேலதிகமாக - உறுப்பினர்களின் சேம நலத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்காக சங்கம் செலுத்த வேண்டிய காலம் வந்துள்ளது.

நம்மையும் உள்ளடக்கிய - உலக முதியோர் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளில் ஒரு முக்கியமானது தனிமை அல்லது முதுமையில் தனித்துவிடப்படுதல் ஆகும்(Loneliness). தனது உறவினர்களிடமிருந்து பிரிந்துவிட நேரிடுவது இதன் அடிப்படை காரணமாகும். தனது வாழ்க்கைத் துணைவர்களிடமிருந்தும் மக்கள், உறவினர்கள், நண்பர்களிடமிருந்தும் விலகிச் செல்ல காரணமாகும் பல்வேறு காரணங்கள் மற்றும் தலைமுறைகளுக்கு இடையில் ஏற்படும் வேறுபாடுகள் - சமூக மதிப்புகள் மற்றும் தொழில்நுட்பத்தில் நடைபெறும் தொடர்ச்சியான மாற்றங்கள் போன்றவையும் இந்த தனிமைக்கு பெரிதும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. நாம் எதிர்கொள்ளும் தனிப்பட்ட சூழ்நிலைகள், நோய்கள் மற்றும் உறவினர்கள் வெளிநாடு சென்றுவிடுதல் போன்றவை இந்த தனிமையை மேலும் தீவிரமாக்கும் காரணிகளாக இருக்கலாம். சிலர் தங்கள் குடும்ப உறுப்பினர்களுடன் பழக்கமான வாழ்விடத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் போதே அந்த குடும்பத்திற்குள்ளேயே தனிமையில் இருக்கலாம்.

தனிமை குறித்து சமீபத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சி என்னவென்றால் தனிமை காரணமாக ஒருவரின் வாழ்க்கை ஆபத்து 39% அதிகரிக்கக்கூடும் என்பதாகும். இதில் மிகவும் வருத்தத்திற்குரிய நிலைமை என்னவென்றால் தனித்து வாழ்வதால் இந்த நிலைமை 77% வரை அதிகரிக்கக்கூடும் என்பதாகும். அதேபோல் உலக மக்கள்தொகையில் ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டால் 33% பேர் தனிமையில் அவதிப்படுகின்றனர். இலங்கை சமூக அமைப்பில் இந்த மதிப்புகள் இதை விட குறைந்த மதிப்பை எடுக்கக்கூடும் என்றாலும் எதிர்காலத்தில் அவை அதிகரிக்கும் ஆபத்தும் இல்லாமல் இல்லை.
எங்கள் உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் இந்த தனிமை பிரச்சனைக்கு சில நிவாரணங்களை தேடுவதற்கு காலம் வந்துவிட்டது. பிரதான, மாவட்ட, பிராந்திய சங்கங்களுக்கும் சகல உறுப்பினர்களுக்கும் கைவிட முடியாத பொறுப்பு இது சம்பந்தமாக உள்ளது.

sgd.
ஜினதாச கமகே.

**கஷ்டங்களை எதிர்கொள்ளும் உறுப்பினர்களுக்கு உதவுவோம் !**

முதுமையின் பலவீனங்கள் மற்றும் தவிர்க்க முடியாத "தனிமை" காரணமாகவும் உடல் மற்றும் மன ரீதியாக அசௌகரியத்திற்கு ஆளாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த நிலைமைகளுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய சங்கத்தின் சேமநலத் துணைக்குழு செயல்பட்டு வருகிறது.



இப்போது எங்கள் உறுப்பினர்களில் மிகப்பெரும்பாலானவர்கள் தங்கள் 75வது பிறந்தநாளையும் கடந்துவிட்டனர்! அவர்களுக்கு எங்கள் அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வோம்.

**சங்க தலைமை இலங்கை வங்கி தலைவரைச் சந்தித்தது**

இலங்கை வங்கி ஓய்வூதியர்கள் சங்கத்தின் புதிய தலைமையின் முதன்மையானவர்கள் 2025-013 அன்று இலங்கை வங்கியின் தலைவர் காவிந்த த சோய்சா அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்தனர். இந்த நட்பு ரீதியான சந்திப்பில் இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் ரசல்/பொன்சேகா அவர்களும் மனித வள பிரதி பொது முகாமையாளர் தம்ம விஜேவர்தன அவர்களும் இணைந்தனர்.

**இவ்வுலகை விட்டுப் பிரிந்த சங்கத்தின் இரு முன்னாள் தலைவர்கள்!**

- **திரு. K.T கருணாரத்ன(1955-2025)**



ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வணிகவியல் கௌரவ பட்டம் பெற்று (1981) பெப்ரவரி மாதம் முகாமைத்துவ பயிற்சியாளராக இலங்கை வங்கியில் சேர்ந்த கே.டி. கருணாரத்ன அவர்கள், பயிற்சிக்குப் பிறகு வங்கியின் கிராந்துருகொட்டே போன்ற வசதி குறைந்த பிரதேசங்களில் பணியாற்றி கிராமப்புற மக்களுக்கு விவசாயக் கடன் போன்றவற்றை வழங்கி வங்கிச் சேவைக்கு அப்பாற்பட்ட சேவையை வழங்கினார்.பின்னர் கொழும்பு புதுக்கடை, வெள்ளவத்தை போன்ற கிளைகளில் முகாமையாளர் பதவியை வகித்து நகர்ப்புற மக்களுக்குப் பாராட்டத்தக்க சேவையை வழங்கினார். 5S எண்ணக் கருவினைப் பயன்படுத்தி அவர் வெள்ளவத்தை கிளையை நவீனமயமாக்கினார். கிழக்கு மாகாண உதவிப் பொது முகாமையாளர் பதவியையும், Central Back Office பொறுப்பான உதவிப் பொது முகாமையாளர் பதவியையும் வகித்த கருணாரத்ன அவர்கள் இலங்கை வங்கியின் கணினிமயமாக்கல் பணிகளில் முக்கிய பங்காற்றினார். வங்கியின் மத்திய பயிற்சி நிறுவனத்திலும் பல விரிவுரையாற்றியுள்ளார்.

34 ஆண்டுகளாக இலங்கை வங்கியின் பல்வேறு பிரிவுகளில் சிறப்பான சேவை செய்த கருணாரத்ன அவர்கள் 2015 ஆகஸ்ட் மாதம் வங்கிச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

ஓய்வுபெற்ற பிறகு தனது வழக்கமான தலைமைத்துவ திறமையை வெளிப்படுத்தி இலங்கை வங்கி ஓய்வூதியர்கள் சங்கத்தின் கம்பஹா மாவட்ட செயலாளர் மற்றும் பொருளாளர் பதவிகளை வகித்து சங்கத்திற்கு பாரிய சேவை செய்தார். அவர் பல ஆண்டுகளாக ஓய்வூதியர்கள் மரண நன்கை சங்கத்தின் தலைவர் பதவியை வகித்து சிறந்த நிதி முகாமைத்துவத்தை அறிமுகப்படுத்தி மரண உதவித் தொகையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுத்தார். பல ஆண்டுகள் களணி பிராந்தியக் கிளையின் தலைவராகச் செயல்பட்டு பல்வேறு சமூக மற்றும் புண்ணிய நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நிறைவேற்றி முன்மாதிரியாக திகழ்ந்தார்.
அதேபோல் மிகவும் வசதிகுறைந்த பிரதேசங்களில் அமைந்த புத்த விகாரைகளின் மேம்பாட்டுப் பணிகளுக்காகவும் தன்னார்வமாக தனது பணம், உழைப்பு மற்றும் நேரத்தை அர்ப்பணித்த கருணாரத்ன அவர்கள் 2025 ஏப்ரல் மாதம் காலமானார். அவருக்கு நிர்வாண மோக்ஷம் கிடைக்க பிரார்த்திக்கிறோம்!

- திரு. காமினி ஜயரத்தின



1982 செப்டம்பர் 15 அன்று கனிஷ்ட எழுதுவினைஞராக இலங்கை வங்கியின் சேவையில் சேர்ந்து 2017 நவம்பர் 15 அன்று சிரேஷ்ட முகாமையாளராக பி. டீ. ஜீ. ஜயரத்ன அவர்கள் ஓய்வு பெற்றார்.
தலைமை அலுவலக Corporate கிளையின் பணியாளர் குழுவில் 1982 ஆண்டில் சேர்ந்த காமினி சிறிது காலத்திலேயே, நிர்வாகத்தில் வாடிக்கையாளர்கள் மத்தியில் பிரபலமான நபராக மாறினார். தனது பணிகளை உயர்மட்டத்தில் நிறைவேற்றிய ஜயரத்ன தொழிற்சங்க சமூக சேவை நடவடிக்கைகளில் ஆர்வத்துடன் பங்கு பற்றினார். அதேபோல் தொழில்சார் கல்வி நடவடிக்கைகளிலும் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டார்.

நிறுவன கிளையிலிருந்து விடைபெற்றுக்கொண்ட காமினி பின்னர் தனது சொந்த மகாமான சபரகமுவ அலுவலகத்தை மையமாக கொண்டு மாகாணத்தின் பல்வேறு கிளைகள் மற்றும் பிரிவுகளில் சேவை செய்துள்ளார். நிவித்திகல கிளையின் முகாமைளராகவும் சேவை செய்துள்ளார். இலங்கை வங்கியின் சபரகமுவ மாகாண அலுவலகத்தின் சிரேஷ்ட முகாமையாளராக இருந்த போது.
ஓய்வு பெற்று ஓய்வூதியர்கள் சங்கத்துடன் இணைந்த காமினி குறிப்பாக எங்கள் இரத்னபுரி மாவட்ட அமைப்பின் பிரபலமான தலைவராக மாறினார். எட்டு கடந்த காலத்தில் சங்கத்தில் பல்வேறு பதவிகளை வகித்து வந்த உறுப்பினர்களுக்கு மகத்தான சேவை ஆற்றிய காமினி மரணமடைந்த போது மாவட்ட அமைப்பு தலைவராகவும் தலைமை சங்கத்தின் நிர்வாகக் குழு உறுப்பினராகவும் இருந்தார்.
ஓய்வூதியர்கள் சங்கத்தின் 45வது ஆண்டு நிறைவு, இரண்டு நாள் அனுராதபுரத்தில் நடைபெற்ற சர்வமத நிகழ்ச்சி, இரத்தினபுரி ஆண்டு நிகழ்ச்சிகளுக்கும் பாராட்டும் வகையில் ஏற்பாடு செய்தார்.

2025 ஏப்ரல் 24 ஆம் தேதி எதிர்பாராத நோய் காரணமாக தனது அன்பான மனைவி, மூத்த புதல்வன் சுதிர மற்றும் புதல்வி அமன்தாவையும், இலங்கை வங்கியின் ஓய்வூதியம் சங்கத்தின் இரத்தினபுர மாவட்ட அமைப்பையும், பிரதான சங்கத்தையும் விட்டு பிரிந்த காமினி ஜயரத்ன ஏற்படுத்திய வெற்றிடம் என்றும் நிரப்ப முடியாதது.

காமினியின் மனைவி நாற்பது வருட ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார். மருத்துவரான மகன் சுதிர ஆஸ்திரேலியாவிலும், பேராசிரியையான மகள் அமந்தா அனுராதபுரத்திலும் சேவையாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.
அவருக்கு நிர்வாண மோக்ஷம் கிடைக்க பிரார்த்திக்கிறோம்!

**எங்கள் வலைத்தளத்தைப்(WEB) பயன்படுத்துவோம்(web -www.bocpenasso.com)**

உறுப்பினர்களின் தகவல் தொடர்பாடலை மிகவும் விரைவான மற்றும் முறையான நிலைக்கு கொண்டு வரும் நோக்கத்துடன் வலைத்தளம்(WEB) உருவாக்கி பராமரிக்கப்பட்டு வருகிறது. www.bocpenasso.com பயன்படுத்துவதன் மூலம் சங்கத்தின் தகவல்கள் மற்றும் உறுப்பினர்கள் தொடர்பான சிறப்பு தகவல்களைப்பெறலாம், பொதுவாக உறுப்பினர்களுக்கு தேவையான படிவங்கள் முதலியவற்றை பதிவிறக்கம்(Download) செய்யலாம்.

அதேபோல் உறுப்பினர்களின் படைப்புகள், புகைப்படங்கள் மற்றும் குழு தகவல்களை சங்கத்தின் பிரதான செயலாளருக்கு அனுப்புவதன் மூலம் இந்த வலைத்தளத்தில் வெளியிடுவதற்கான வாய்ப்பும் உள்ளது. உங்கள் வலைத்தளத்தை உலம்வாருங்கள்(Browse), வலைத்தளத்தை பயன்படுத்துங்கள். மேம்படுத்துவதற்கு தேவையான முன்மொழிவுகளை வரவேற்கிறோம்.

★★ ★★★★